இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 30-01-2025

# பா.ஜ.க. ஆட்சியைப் பார்க்கவும்!

கிண்டி ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு திடீரென்று தலித் பாசம் பொங்கி வழிகிறது. அப்படிக் காட்டிக் கொள்வதற்காக தி.மு.க. அரசு மீது அவதூறுகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் பட்டியலின மக்கள் மீது அதிகமான கொடுமைகள் நடப்பதாக அவதூறு செய்து கொண்டிருக்கிறார். அவதூறுதான் அவரது மூச்சு, பேச்சு, எல்லாம்!

அய்யா ஆளுநர் அவர்களே! இதைச் சொல்வதற்கு நீங்கள் போக வேண்டிய இடம் பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்கள் தான்!

**தேசிய குற்றப் புலனாய்வு நிறுவனம் மற்றும் ஒன்றிய அரசு ஆகியவற்றின் தரவுகளின்படி, பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகளில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களே முன்னணி வகிக்கின்றன.**

23.9.2024 அன்று 'தினமணி' நாளிதழ் 10 ஆவது பக்கத்தில், 'பட்டியலின சமூக மக்களுக்கு எதிரான குற்றங்கள் - 13 மாநிலங்களில் மட்டும் 97 விழுக்காடு வழக்குகள் பதிவு' - என்ற தலைப்பில் செய்தி வெளியானது. பட்டியலின, பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகள் தொடர்பாக ஒன்றிய அரசு வெளியிட்ட அறிக்கையை மையமாக வைத்து இந்த செய்திக் கட்டுரை வெளியானது.

**உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில்தான் பட்டியலின மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகம் நடப்பதாக ஒன்றிய அரசின் அறிக்கை சொல்கிறது. மூன்று மாநிலத்தையும் ஆள்வது பாரதிய ஜனதா கட்சி தான். இந்தப் பட்டியலில் அடுத்த மூன்று மாநிலங்கள் எது தெரியுமா? பா.ஜ.க. கூட்டணி ஆளும் பீகார், நான்காவது இடத்தில் இருக்கிறது. பா.ஜ.க. ஆளும் ஒடிசா, ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. பா.ஜ.க. கூட்டணி ஆளும் மகாராஷ்டிரா, ஆறாவது இடத்தில் இருக்கிறது.**

2022 ஆம் ஆண்டு பதிவான வன்கொடுமை வழக்குகள் 51, 656. இதில்,

★ உ. பி - 12,287

★ ராஜஸ்தான் - 8,651

★ மத்தியப்பிரதேசம் - 7,732

★ பீகார் - 6,799

★ ஒடிசா - 3,576

★ மகாராஷ்டிரா - 2,706 - என்கிறது அந்த அறிக்கை.

இந்தியா முழுவதும் பதிவான வழக்குகளில் 81 விழுக்காடு வழக்குகள் இந்த ஆறு மாநிலங்களில் பதிவாகி உள்ளன. உ.பி.யில் பதிவானது மட்டும் 23.78 விழுக்காடு ஆகும்.

பழங்குடியினருக்கு எதிரான வழக்குகளில் முதலிடத்தை பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசம் தான் பிடித்துள்ளது. ராஜஸ்தான், ஒடிசா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

**★ 2024 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 16ஆம் தேதி உத்தரப்பிரதேசத்தில் அம்பேத்கர் நகரில் ஒரு தலித் பெண் கூட்டு வல்லுறவு செய்யப்பட்டார். அவரது தந்தை காவல்துறையை அணுகி இருக்கிறார். முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய காவல்துறை மறுத்திருக்கிறது. மன அழுத்தம் தாங்காமல் அப்பெண் தற்கொலை செய்து கொண்டார்.**

**★ ராஜஸ்தானில் உள்ள சுற்றுலா தலத்தில் படப்பதிவு செய்து கொண்டிருந்த ஒரு தலித் இளைஞர் தாக்கப்பட்டிருக்கிறார். அவரை முட்டிப் போட வைத்து, அவர் மீது சிறுநீர் கழித்திருக்கின்றனர்.**

**★ மத்தியப் பிரதேசத்தில் ஒரு தலித் பஞ்சாயத்து தலைவர் மரத்தில் கட்டி வைத்து அடிக்கப்பட்டு, ஊரை விட்டு விரட்டப்பட்டார்.**

**★ கடந்த 2023ஆம் ஆண்டில், தலித்துகள் மீதான வன்கொடுமை குறித்த கேள்விக்குப் பதிலளித்த ஒன்றிய அரசு, 2018 ஆம் ஆண்டு தொடங்கி நான்கு வருடங்களில் 1.9 லட்சம் வன்கொடுமை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தகவல் அளித்தது. தேசிய குற்ற ஆவண நிறுவனத் தரவுகளின்படி இச்சம்பவங்களில் உத்தரப்பிரதேசத்தில் மட்டும் 49,613 வன்கொடுமைகள் தலித்துகள் மீது தொடுக்கப்பட்டிருக்கின்றன. தலித்துகள் மீதான வன்முறைகளில் உத்தரப்பிரதேசம் முதல் இடத்தில் இருக்கிறது.**

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையின்படி 2023 ஆம் ஆண்டு வரையிலான தரவுகளில் 12,287 பதிவு செய்யப்பட்ட சம்பவங்களுடன் உத்தரப்பிரதேசம், தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமை எண்ணிக்கையில் முதல் இடத்தில் இருக்கிறது. அடுத்த இடத்தில் மத்தியப் பிரதேசம் இருக்கிறது.

உத்தரப்பிரதேசத்தில் 2021 ஆம் ஆண்டு 13,146 ஆக இருந்த குற்றச் சம்பவங்கள் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டில் 15,368 ஆக உயர்ந்திருக்கிறது. 16% அதிகம். இத்தகைய சம்பவங்களில் காவல்துறை எடுத்த நடவடிக்கை என்ன தெரியுமா?

பட்டியல் சாதியினர் மீதான வன்கொடுமை சம்பவங்கள் 69,597 ஆகவும் பட்டியல் பழங்குடியினர் மீதான வன்கொடுமை சம்பவங்கள் 12,417 ஆகவும் மொத்தத்தில் பதிவான நிலையில், 49,852 சம்பவங்களில்தான் காவல்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறது.

2022 ஆம் ஆண்டின் முடிவில் 17,166 பட்டியல் சாதியினர் மீதான குற்றச்சம்பவ வழக்குகளும் 2,702 பட்டியல் பழங்குடியினர் மீதான குற்றச் சம்பவ வழக்குகளும் காவல்துறையால் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன.

**பிரதமர் மோடியின் சொந்த மாநிலமான குஜராத் நிலைமை என்ன தெரியுமா? தலித்துகள், தலித் பெண்கள் மீது அரங்கேற்றப்பட்ட வன்கொடுமைகள் கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் 9,214 என பதிவாகி உள்ளது. 2015 ஆம் ஆண்டு பதிவான 1,010 வழக்குகளில் 10 வழக்குகளுக்கு மட்டுமே தண்டனை தரப்பட்டுள்ளது. 2016 ஆண்டில் பதிவான 1,322 வழக்குகளில் 22 வழக்குகளுக்கு மட்டுமே தண்டனை தரப்பட்டுள்ளது. இதுதான் பா.ஜ.க. ஆட்சியின் நிலைமை ஆகும்.**

**ஆர்.என்.ரவி தனது அக்கறையை அங்கே போய் காட்டவும்.**

## எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை மீறி, வக்ஃபு மசோதாவுக்கு கூட்டுக்குழு ஒப்புதல்!

# வக்ஃபு மசோதாவுக்கு கூட்டுக்குழு அளித்த ஒப்புதலை எதிர்த்து நீதிமன்றத்தை நாடுவோம்!

## நாடாளுமன்ற மக்களவை கழகக் கொறடா ஆ.ராசா எம்.பி., பேட்டி!

**புதுடெல்லி, ஜன.30-**

**எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி, வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவுக்கு கூட்டுக்குழு ஒப்புதல் அளித்துள்ளதை, தி.மு.க. வன்மையாக கண்டித்துள்ளது. வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவுக்கு ஒப்புதல் அளித்ததன் மூலம், இஸ்லாமியர்களின் 60 சதவீத சொத்துக்களை பறிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டுள்ளதாக மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா குற்றம்சாட்டியுள்ளார். நாடாளுமன்றத்தில் வக்ஃபு மசோதாவை நிறைவேற்றினால் நீதிமன்றத்தை நாடுவோம் என்றும் ஆ.ராசா எம்.பி., அப்போது குறிப்பிட்டுள்ளார்.**



வக்ஃபு வாரியத்தை சீரமைக்கப் போவதாகக்கூறி, வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவை கடந்த தாண்டுநாடாளுமன்றகுளிர்கால கூட்டத்தொடரில் மக்களவையில் ஒன்றிய அரசு தாக்கல் செய்தது. திருத்தப்பட்ட சட்ட வரைவின்படி, வக்ஃபு வாரியத்தில் 2 பெண் உறுப்பினர்கள் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்றும், இஸ்லாமியர் அல்லாத இருவர் உறுப்பினர்களாக இடம்பெற வேண்டும்என்றும்கூறப்பட்டது.

**மசோதாவிற்கு ஆரம்பக் கட்டத்திலேயே எதிர்ப்பு!**

இந்த மசோதாவை ஆரம்பக் கட்டத்திலேயே எதிர்க்கட்சிகள் எதிர்த்ததால், கூட்டுக்குழுவின் விவாதத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, வக்ஃப் மசோதாவுக்கு, நாடாளுமன்ற கூட்டுக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

**572 முன்மொழிவுகள் எதிர்க்கட்சிகள் பரிந்துரை!**

இந்த மசோதாவில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று 572 முன்மொழிவுகளை எதிர்க்கட்சிகள் பரிந்துரைத்திருந்தன.

ஆனால், அவற்றை கூட்டுக்குழுத் தலைவர் ஜெகதாம்பிகா பால் நிராகரித்தார். தேசிய ஜனநாயக் கூட்டணி கட்சிகளின் 14 திருத்தங்களை மட்டும் கூட்டுக்குழுத் தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார். இதனிடையே, சர்ச்சைக்குரிய வக்ஃபு மசோதாவுக்கு கூட்டுக்குழு ஒப்புதல் அளித்துள்ளதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. டெல்லி சட்டப்பேரவை தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்பாக, திருத்தப்பட்ட வக்ஃபு வாரிய வரைவு மசோதாவை, நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் தாக்கல் செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டுள்ளது.

**ஆ.இராசா எம்.பி. பேட்டி**

இதுதொடர்பாக நாடாளுமன்ற கழகக் கொறடா ஆ.ராசா டெல்லியில் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது;-

32 பக்க எதிர்ப்பு அறிக்கையை கூட்டுக்குழுவிடம் அளித்துள்ளோம். வக்ஃபு வாரிய சட்டத்தில் காங்கிரஸ் அரசால் செம்மைப்படுத்தப்பட்ட பிரிவுகள் அனைத்தையும் திருத்தியுள்ளனர்.

**பாதுகாப்பு தரும் பிரிவுகள் நீக்கம்!**

இஸ்லாமியர் பாதுகாப்பை உறுதி செய்ய மன்மோகன் சிங் ஆட்சியில் கொண்டுவந்த பிரிவுகள் திருட்டுத்தனமாக நீக்கப்பட்டுள்ளன. வக்ஃபு வாரிய சொத்துகளை அரசுடைமையாக்கும் வகையில் சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

வக்ஃபு வாரிய சட்டத்திருத்த மசோதாவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்.

சிறுபான்மை மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் கவனத்துடன் இருக்க வேண்டும் என முதல்வர் அவர்கள் அறிவுறுத்தி வருகிறார். முதல்வர் அறிவுறுத்தலின்படி இஸ்லாமியர் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் ஆலோசித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்வோம். எதிர்க்கட்சிகள் கொடுத்த எந்த திருத்தங்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை. வக்ஃபு சட்டத்திருத்தம் அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என உச்சநீதிமன்றம் கூறும் சூழலை உருவாக்க பாடுபடுகிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றி

# பொதுமக்களின் கனவை நினைவாக்கியுள்ளார் முதல்வர்!

## உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

ஒட்டன்சத்திரம், ஜன. 30-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் கீரனூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகளை சென்னையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டி உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 480 ஜி பிளஸ் 3 அடுக்குமாடி குடியிருப்புகள் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.66.23 கோடி மதிப்பீட்டிலும், கீரனூர் பேரூராட்சி அண்ணா நகரில் 432 குடியிருப்புகள் ரூ.57.04 கோடி மதிப்பீட்டிலும் என இரு திட்டங்களும், இராதாபுரத்தில் 2 பேரூராட்சிகளிலும், நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் என 5 இடங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் குடிசையில் வாழ்கின்ற மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்ட வேண்டும் என்பதற்காக நிதிகளை ஒதுக்கி அத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

**எல்லோர்க்கும் எல்லாம் என்ற வகையில் சிறப்பான ஆட்சி!**

பேரறிஞர் அண்ணா ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் என கூறினார், முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஏழையின் சிரிப்பில் பேரறிஞர் அண்ணாவை காணலாம் என சொல்வார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் ஏழையின் சிரிப்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை காணலாம் என சொல்வார். அந்த வகையில் எல்லோர்க்கும் எல்லாம் என்ற வகையில் ஒரு சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 480 ஜி பிளஸ் 3 அடுக்குமாடி குடியிருப்புகள் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.66.23 கோடி மதிப்பீட்டிலும், கீரனூர் பேரூராட்சி அண்ணா நகரில் 432 குடியிருப்புகள் ரூ.57.04 கோடி மதிப்பீட்டில் என மொத்தம் 912 குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கி, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, வீட்டின் உரிமையாளர்களுக்கு குடியிருப்பு சாவிகள் ஒப்படைக்கப்படும்.

மேலும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களுக்கும் விரைவில் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போது கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் நடைபாதை, கழிப்பறை, மின் வசதிகள், விளையாட்டு மைதானம், நியாயவிலைக்கடை ஆகிய அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் கீரனூர் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மக்கள் நலனுக்கென பல்வேறு திட்டங்கள்!**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் ஒரு நபருக்கு 135 லிட்டர் குடிநீர் தினந்தோறும் வருகின்ற வகையில் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் முழுமையாக வழங்கப்படும்.

மேலும், ஒட்டன்சத்திரம் தொகுதியில் அனைத்து பகுதிகளிலும் சாலை பணிகள், கழிவு நீர் வாய்க்கால் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஒட்டன்சத்திரம் நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக மாற்றுவதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது. இதுபோல் எண்ணற்ற பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு செய்துள்ளார்கள். மேலும், விடியல் பயணம், மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், காலை உணவுத் திட்டம், தமிழ்ப்புதல்வன், சுய உதவிக்குழுக்களுக்கு கூட்டுறவு வங்கியில் வழங்கப்பட்ட கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 5 பவுனுக்கு குறைவாக நகைக்கடன் தள்ளுபடி, பெண்கள் சுய உதவிக்குழு கடன் ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரத்தில் பேருந்து நிலையத்தில் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் நகரும் நடை மேம்பாலம் கட்டப்படவுள்ளது. அம்பிளிக்கையில் பெண்கள் படிக்கின்ற கல்லூரி செயல்பட்டு வருகிறது. விருப்பாட்சியில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் தொழிற் பயிற்சி நிலையம் கட்டப்பட்டுள்ளது.

ஏழை, எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் தமிழக அரசுக்கும் மக்கள் என்றும் ஆதரவு அளிக்க வேண்டும், என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, ஒட்டன்சத்திரம் நகர்மன்றத் தலைவர் திருமலைச்சாமி, துணைத்தலைவர் வெள்ளைச்சாமி, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியம் நிர்வாகப் பொறியாளர்சுதர்சன், உதவி நிர்வாகப் பொறியாளர் ஈஸ்வரி, உதவிப் பொறியாளர்கள் ரியோ, திவ்யா, ஆணையாளர் ஸ்வேதா, பொறியாளர் சுப்பிரமணிய பிரபு, மாவட்ட அவைத்தலைவர் மோகன், மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், பேரூர் செயலாளர் அன்பு என்ற காதர் பாட்ஷா, நகர்மன்ற உறுப்பினர் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், வடிவேல், முருகன், பிரபு பாண்டியன், கீரனூர் பேரூராட்சி தலைவர் கருப்புசாமி, துணைத் தலைவர் ஹாஜி அப்துல் சுக்கூர், சுகாதார ஆய்வாளர் ராஜ மோகன் உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள், வார்டு செயலாளர்கள்

முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட ஆச்சார்யா வினோபாபாவே நகர் கீரனூர் அண்ணாநகர்பகுதிகளில் ரூ.128.28 கோடியில் 913 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து நடைபெற்ற விழாவில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அடிக்கல் நாட்டினார். இதில் ஆர்.சச்சிதானந்தம் எம்.பி., உள்ளிட்ட அரசு அதிகாரிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.